

Nguyễn Trinh Thi. Still of *47 Days, Sound-less*. 2024. Image courtesy of the artist.

ங்குயென் ட்ரின் தி (Nguyễn Trinh Thi)
***47 நாட்கள், ஒலியில்லா***
2024
காணொலி, இரு திரைகள், கண்ணாடிகள்
காணொலி: மூன்று ஒளிவழித் திரையீடு, 16:9, 16:9, 5:2 அகல, உயர விகிதங்கள், கறுப்பு, வெள்ளை, வண்ணம், ஒலி (பல திசை தொனியுடைய) 30 நிமிடம்.

**ஹான் நெஃப்கன்ஸ் அறக்கட்டளை (Han Nefkens Foundation), மோரி கலை அரும்பொருளகம், M+, சிங்கப்பூர்க் கலை அரும்பொருளகம் ஆகியவற்றால் பணிக்கப்பட்டது.**

வியட்னாமியக் கலைஞரான ங்குயென் ட்ரின் தியின் *47 நாட்கள், ஒலியில்லா* என்னும் இந்தப் படைப்பு, உலகத்திற்குரிய சொல், வனம் என்பது *The Word for World Is Forest* (1972) போன்ற எர்சுலா கே லெக்வின் (Ursula K. Le Guin) நாவல்களைப் பின்பற்றி, ஓர் அடர்ந்த வனத்தில், தாம் எங்கிருந்து வந்தார் என்னும் எந்தச் சுவடும் இன்றி, தாம் யாராக, என்னவாக இருந்தோம்; இருக்கிறோம் என்னும் எந்த நினைவும் இன்றித் தனியாக அலையும் மனிதர் ஒருவரைப் பற்றிய கற்பனைக் கதையைக் கூறுகிறது.

பின்னணியாகப் பயன்படுத்தப்படும் இயற்கை நிலக்காட்சிகள், பெயர் குறிப்பிடாக் கதாபாத்திரங்கள், தென்கிழக்காசியாவில் படமாக்கப்பட்ட, மனிதக் கண்ணோட்டங்களினும் அதிகமாக வெளிப்படுத்தும் அமெரிக்க, வியட்னாமியத் திரைப்படங்களின் ஒலிக்கூறுகள் ஆகியவற்றை, தி, அடையாளப்படுத்துகிறார். தி-யைப் பொறுத்தவரை, இந்தக் கலைப்படைப்பு காட்சி- சார் வழக்கக் கருத்துகளுக்குச் சவால் விடுக்கும், திரைப்படம் சார்ந்த கதை சொல்லலில், காட்சிக்குரியஆதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கும், ஒரு வகை “விரிவுபடுத்தப்பட்ட திரைப்படம்.”

சொட்டும் நீர், பறவைகள், வெட்டுக்கிளிகள் ஆகியவற்றின் எதிரொலியுடன் மறுவுருவாக்கம் செய்யப்பட்ட மரங்கள், இலைகள், வானம் ஆகிய பிம்பங்களைக், கலைஞர் கவனமாகப் பின்னுகிறார். எனினும் ஒலிகள் எல்லாம், இயற்கையிலிருந்து வந்தவையல்ல. அவற்றுள் சில இயற்கை ஒலிகளைப் பிரதிபலிக்கும் வகையில், உள்ளூர் இசைக் கருவிகளால் இசைக்கப்பட்டவை. காணொலியில், வியட்னாமின் மத்திய மலைப்பகுதிச்

சார்ந்த ஜராய் வாசிகள் கூடியிருக்கின்றனர். இறந்தவர்கள் சடங்கிற்கு ஆயத்தம் செய்யும் அவர்கள், மனிதக் கண் அல்லாத, கண்களையுடைய மனிதனைப் பற்றிப் பேசுகின்றனர்.

கண்காட்சி மையத்தில், காணொலிக் காட்சித் துணுக்குகள், கண்ணாடி அமைப்பால், சுற்றியிருக்கும் சுவர்களில் பிரதிபலிக்கப்பட்டு, ஓர் இடத்திற்கும் அதில் வசிப்பவருக்கும்இடையில், பிரிக்க முடியா உறவைப் பற்றிச் சிந்திக்க, புதிய வழிகளை வழங்குகிறது.

*47 நாட்கள், ஒலியில்லா* (*47 Days, Soundless*) ஹான் நெஃப்கன்ஸ் அறக்கட்டளை (Han Nefkens Foundation), மோரி கலை அரும்பொருளகம், M+ ஹாங்காங், சிங்கப்பூர்க் கலை அரும்பொருளகம் (நகரும் பிம்பப் பொறுப்பாண்மைக் குழு, 2021) ஆகியவற்றின் ஆதரவுடன் உருவாக்கப்பட்டது. இந்தக் குழு, நகரும் பிம்பத் துறையின் சமகாலக் கலைப் படைப்பை ஆதரிக்கும் நோக்கம் கொண்ட ஓர் அமைப்பு. அது ஆசிய நாடுகளின் அல்லது ஆசியாவில் வசிக்கும் தொழில்முறைக் கலைஞர்களை இலக்காகக் கொண்டது.